Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.III. TIRUPATTUR**

Case No. CC.292/2023

**DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.1 , Page.No.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திருமதி. சகுந்தலா | **தொழில்** | விவசாயம் |
| **த/க பெயர்** | திரு. சிவலிங்கம் | **கிராமம்/ஊர்** | கல்லரைபட்டி |
| **வயது** | 50 | **மாவட்டம்** | திருப்பத்தூர் |

| | |
|---|---|
| எதிரிகள் ஆஜர் | 1,2 |
| எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச 317/ பா.நா.சு.ச 355 பிரிவு- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது | 3 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 23rd day of June 2026

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை-**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். எனக்கு தேதி மாதம் வருடம் நினைவில்லை. ஒரு நாள் இரவு 10.00மணியளவில் எனது நாத்தனார் கனகா எங்களது வீட்டிற்கு வந்திருந்தார். மறுநாள் காலை 11.00 மணியளவில் கனகா எனது வீட்டில் இருந்தபோது, அவரது மருமகள் ரஞ்சிதா அவரை வீட்டிற்கு வருமாறு கூறி அடித்தார். நானும், எனது கணவரும் ஏன் அடிக்கீறீர்கள் என்று கேட்டபோது, என்னையும் எனது கணவரையும் அசிங்கமாக திட்டினார்கள். பின்னர், 3 எதிரிகளும் என்னை வலது பக்க காதில் தடியால் அடித்தார்கள். தடுக்க வந்த எனது கணவரையும் எதிரிகள் தடியால் முதுகில் அடித்தார்கள். பின்னர் நாங்கள் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்ந்தோம். மருத்துவமனையில் நாங்கள் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் அளித்ததுதான். மேலும், புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(அந்த புகார் வாக்குமூலம் என்னால் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

என்னிடம் காட்டப்படும் மரத்தடி தான் எதிரிகள் என்னை தாக்க பயன்படுத்திய பொருள் ஆகும். **(அது அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பத்தை நான் காவல் நிலையத்தில் வைத்து செய்தேன் என்றால் சரிதான். நான் கையொப்பமிடும் போது என்னுடன் எனது தந்தையும் இருந்தார். சம்பவத்தின் போது எனக்கும் எனது கணவருக்கும் 1ம் எதிரி ரஞ்சிதாவுக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். நான் எதிரிகளின் பேரிலும், எதிரிகள் எங்களது பெயரிலும் புகார் அளித்துள்ளோம் என்றால் சரிதான். 1ம் எதிரி ரஞ்சிதாவிற்கு தலையில் 10 தையல்கள் போடப்பட்டதாக பின்னர் கேள்விப்பட்டேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து கொம்பு நாங்கள் எதிரிகளை அடிக்க பயன்படுத்தியது என்றால் சரியல்ல. கொம்பை எனது கணவர் தான் போலீசார் கேட்டுக்கொண்டதால் வெட்டிக்கொண்டு போய் கொடுத்தார் என்றால் சரிதான். சம்பவத்திற்கு 20 நாட்கள் பின்னர் காவல் துறையினர் வழக்கு சொத்து கொம்பை பெற்றிருப்பார்களா என்றால் சரிதான். நான் தவறி விழுந்ததால் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் தான் 1–ம் எதிரியை தாக்கினேன் என்றால் சரியல்ல.வழக்கு சம்பந்தமாக எங்கள் ஊரில் பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

*(Sd/- S. Kovendhan),*

Signature of Witness — Judicial Magistrate No.III(FAC)

Tirupathur.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.III. TIRUPATTUR**

Case No. CC.292/2023

**DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.2 , Page.No.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. சிவலிங்கம் | **தொழில்** | கூலி |
| **த/க பெயர்** | திரு. ராஜப்பன் | **கிராமம்/ஊர்** | கல்லரைபட்டி |
| **வயது** | 75 | **மாவட்டம்** | திருப்பத்தூர் |

| | |
|---|---|
| எதிரிகள் ஆஜர் | 1,2 |
| எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச 317/ பா.நா.சு.ச 355 பிரிவு– ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது | 3 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 23rd day of June 2026

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை.-**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது கூலி வேலை வருகிறேன். எனது அக்கா கனகா அவர்களது வீட்டில் இருந்து சண்டை போட்டுக்கொண்டு வந்து விட்டார். பின்னர், 08.01.2023 அன்று காலை 11.00 மணியளவில், இவ்வழக்கின் எதிரிகள் மூவரும், அவரை வீட்டிற்கு வருமாறு அழைத்து பிரச்சனை செய்தார்கள். கேட்க சென்ற என்னை எதிரிகள் மூவரும் என்னை தோள்பட்டை மற்றும் முதுகின் மீது அடித்தார்கள். அ.சா.1ன் வலது பக்க காதில் 3ம் எதிரி கட்டையால் தாக்கியதில் அவர் மயக்கம் அடைந்தார். பின்னர், நாங்கள் ஆம்புலன்ஸ் மூலம் வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை -**

அ.சா1 எனது வீட்டில் தான் இருந்தார். எதிரிகள் அ.சா1 ஐ அழைத்தபோது நாங்கள் தான் அவரை அனுப்ப மறுத்தோம் என்றால் சரியல்ல . அ.சா1 எனது வீட்டிற்கு எதற்காக வந்தார்

என்றால் எதிரிகள் அவரை தாக்கியதற்காக வந்தார். போலீசார் விசாரணையில் முதுகின் மீதும் தோள் பட்டையின் மீதும் காயம் ஏற்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில்சிகிச்சையில் சேர்ந்தேன். 1ம் எதிரிக்கு தலையில் 10 தையல்கள் போடப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. மருத்துவமனைக்கு நானும் எனது மனைவி மட்டும் சென்றோம். 1ம் எதிரி என் மீதும் எனது மனைவி மீதும் புகார் அளித்தார் என்றால் சரியல்ல. எனது ஊரை சேர்ந்த தலைவர்கள் வெங்கடேசன், பூபாலன் ஆகியோர் பிரச்சனை வேண்டாம் என்று கூறினார்கள் என்றால் சரிதான். அதன் காரணமாக எங்கள் மீது வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு காயம் ஏற்படாமல் எதிரிகளை நாங்கள் தாக்கிவிட்டு அதில் இருந்து தப்பிப்பதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

*(Sd/- S. Kovendhan),*

Signature of Witness — Judicial Magistrate No.III(FAC)

Tirupathur.

Judicial Form No.53

( See Rule 42 )

DEPOSITION OF WITNESSES

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.III. TIRUPATTUR**

Case No. CC.292/2023

**DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.3 , Page.No.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திருமதி. வசந்தா | **தொழில்** | கூலி |
| **த/க பெயர்** | திரு. தருமன் | **கிராமம்/ஊர்** | கல்லரைபட்டி |
| **வயது** | - | **மாவட்டம்** | திருப்பத்தூர் |

| | |
|---|---|
| எதிரிகள் ஆஜர் | 1,2 |
| எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச 317/ பா.நா.சு.ச 355 பிரிவு– ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது | 3 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 23rd day of June 2026

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை.-**

**நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது கூலி வேலை வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். சம்பவத்தின் போது எனது அக்காவையும், எனது மாமாவையும் ஆஜர் எதிரிகள் அடித்து கொண்டிருந்தார்கள். நான் சென்று தடுத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை -**

**அ.சா.1 எனது அக்கா உறவு முறை என்றால் சரிதான். எனது வீட்டுக்கும் அ.சா1ன் வீட்டிற்கும் 1கிமீ துரம் இருக்கும் என்றால் சரிதான். சம்பவத்தின்போது நான் எனது வீட்டில் இருந்தேன் என்றாலும், 1மணிநேரம் கழித்து சென்றிருப்பேன் என்றாலும் சரிதான். நான் சென்று பார்த்தபோது அவர்கள் மருத்துவமனைக்கு சென்றிருந்தா்கள்.**

**மறுவிசாரணை –** இல்லை

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

*(Sd/- S. Kovendhan),*

Signature of Witness — Judicial Magistrate No.III(FAC)

Tirupathur.

Judicial Form No.53

( See Rule 42 )

DEPOSITION OF WITNESSES

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.III. TIRUPATTUR**

Case No. CC.292/2023

**DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No. 4 , Page.No.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திருமதி. கனகா | **தொழில்** | கூலி |
| **த/க பெயர்** | திரு. பாப்பண்ணன் | **கிராமம்/ஊர்** | கல்லரைபட்டி |
| **வயது** | 70 | **மாவட்டம்** | திருப்பத்தூர் |

| | |
|---|---|
| எதிரிகள் ஆஜர் | 1,2 |
| எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச 317/ பா.நா.சு.ச 355 பிரிவு– ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது | 3 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 23rd day of June 2026

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை.-**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது கூலி வேலை வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். சம்பவத்திற்கு முன்னர், எதிரிகளின் வீட்டில் இருந்து நான் வந்து விட்டேன். 1–ம் எதிரி என்னை வீட்டிற்கு வருமாறு பிடித்து இழுத்தார். அதை தடுக்க வந்த எனது தம்பியையும், எனது தம்பி மனைவியையும் எதிரிகள் அடித்து விட்டார்கள். தடுக்க வந்த எனது தம்பி மனைவியை கொம்பால் காதில் அடித்தார்கள். பின்னர் மருத்துவமனைக்கு சென்றார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை -**

சம்பவத்தின்போது இருட்டான நேரம் என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது நான் வீட்டிற்குள்ளே இருந்தேன் என்றால் சரிதான். அடித்ததாக எனக்கு சொன்னார்கள் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை –** இல்லை

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

*(Sd/- S. Kovendhan),*

Signature of Witness

Judicial Magistrate No.III(FAC)

Tirupathur.